வடுகப்பட்டியல் பூமிதான நிலங்கள்

* வினா எண். 879 திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் ஈரோடு தாலுக்கா வடுகப் பட்டி கிராமம் வினோபாஜிநகர் அரிசன மக்களுக்கு பூமிதானத் துறை மூலம் அண்மையில் நிலம்ஏதேனும் வழங்கப்பெற்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சொ. ந. பழனிசாமி : அமைச்சர் அவர்கள் நான் கேட்ட கேள்விக்கு இல்லையென்று பதில் சொல்லுகிறார்கள். ஆனால் அரிசன மக்களுக்கு வடுகப்பட்டி கிராமத்தில் பூமி தானம் நிலம் கொடுக்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. இதை அரசு ஆராய்ந்து அவர்களுக்கு நிலம் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தற்போது கொடுக்கப் படவில்லை. அது பரிசீலிக்கப்படும்.

இறுதி சடங்குகளுக்கான மானியம்

*வினா எண். 880 திரு. வெ. கருணாமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாழ்த்தப்பட்டோர் இனத்தில் யாரேனும் இறந்து விட்டால் அவர்களது இறுதி சடங்குகளுக்கென ரூ. 50— வழங்க படும் என்று அரசு உத்தரவிட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில் அதை ரூ. 100— ஆக உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் அரசிற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) அரிசனர், மலைவாழ் மற்றும் அரிசனத்திலிருந்து கிறித்துவ மதத்திற்கு மாறியவர்கள் குடும்பத்தி ல்யாராவது இறந்தால் இறப்பு ஒவ்வொன்றிற்கும் ஈமக்கடன் செய்வதற்கென அரசு ரூ. 50— மானியம் வழங்கும் திட்டம் 1978-79 முதல் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

(ஆ) நிதி உதவியினை ரூ. 100— ஆக அதிகரிக்க உத்தே சம் தற்போது இல்லை